பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: சித்திரை 27 (9—5—68) வியாழன் ★ வெளியூர்: சித்திரை 28 (10—5—68) வெள்ளி [இதழ்: 272

நாணயத்தில் தமிழ்

இரா. செழியன் வற்புறுத்தல்

புதுடில்லி, மே 9—

"இந்திய நாணயங்களில் பிற மொழிகளையும் சேர்க்க வேண்டும்; குறிப்பாகத் தமிழ் அதில் இடம்பெற வேண்டும்.

"இனி வெளியிடவிருக்கும் வெள்ளி நாணயங்களில் கண்டிப்பாகத் தமிழும் இருக்கும் என நம்புகிறேன்"

என்று நாடாளுமன்றத்தில் கழக உறுப்பினர் இரா. செழியன் வலியுறுத்தினர்.

'கொலைகார அமைச்சர்' திம்மாரெட்டி

நாடாளுமன்றத்தில் 'வெட்கம்--வெட்கம்' என முழக்கம்

ஒவ்வொரு இந்தியக் குடிமகனையும் இழிவுபடுத்தும் செயல் -- செழியன் கண்டனம்

புதுடில்லி, மே 8—

"ஆதித்திராவிட மக்களுக்கு எதிராகக் கருத்தறிவித்த ஆந்திர அமைச்சர் திரு. திம்மா ரெட்டி மீது நீதி விசாரணை நடத்தவேண்டிய அவசியம் ஏற்படவில்லை"

என்று உள்துறையமைச்சர் திரு. சவான், மக்களவையில் தெரிவித்தார்.

திம்மா ரெட்டியின் விவகாரம் குறித்து நடைபெற்ற இரண்டு மணி நேர விவாதத்தில் சவான் குறுக்கிட்டுப் பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

இந்த விவகாரத்தில் கலந்து கொண்ட கழக உறுப்பினர் திரு. இரா. செழியன் பேசுகையில் கூறியதாவது:—

"திம்மா ரெட்டியின் செயலைக் கண்டிப்பதானது, ஆந்திர மக்களுக்கு எதிரான சொலாகக் கருதப்படக் கூடாது.

திம்மா ரெட்டி கூறியதாகக் கூறப்படும் கூற்று, உள்ளபடியே ஆத்திரத்தை மூட்டக்கூடியதாகும்; அது, தாழ்த்தப்பட்ட மக்களை மட்டுமல்ல; ஒவ்வொரு இந்தியக் குடிமகனையும் இழிவு படுத்துவதாகும்.

'திருடர்களை உதைப்பது கிராமங்களில் சகஜம்' என்று அவர் முதலில் கூறியதாகவும், அதன் பின், 'ஏழைகளாக உள்ள தாழ்த்தப்பட்டவர்கள் தான் பொதுவாகத் திருடுகிறார்கள்' என்று கூறியதாகவும் ஜி. இராமராவ் என்னும் செய்தியாளர் தெரிவித்திருக்கிறார்.

இந்த இரண்டு சொற்றொடர்களையும் வைத்துப் பார்த்தால், உண்மை வெளிப்படையாகவே புரியும்.

ஒரு தாழ்த்தப்பட்ட சிறுவன் உயிரோடு கொளுத்தப்பட்டதையடுத்து, பேட்டியளித்த அமைச்சர், அதுபற்றி எவ்விதப் பரபரப்போ ஆத்திரமோ காட்டவில்லை; அதே நேரத்தில், அந்த அக்கிரமச் செயலை நியாயப்படுத்த முயன்றிருக்கிறார்!

திரு. இராமராவ் தெரிவித்திருக்கும் தகவல்படி, திரு. திம்மா ரெட்டி பத்திரிகையாளருக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கையை நாம் கடுமையாகக் கொள்ள வேண்டும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன், 'எனக்கு எதிரான கருத்துக்களைப் பத்திரிகையில் எழுதுவதை நிறுத்தாவிட்டால், இலட்சுமிகாந்தனுக்கு நேர்ந்த கதிதான் நேரும்' என்று சீதாராம் என்பவருக்கு திம்மா ரெட்டி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

'இலட்சுமிகாந்தம்' என்பவர், சென்னையில் பத்திரிகை நடத்திவந்தார்; அவர், பட்டப் பகலில் கொலை செய்யப்பட்டார். இதுதான் இலட்சுமி காந்தனுக்கு ஏற்பட்ட கதி. (இந்த நேரத்தில் இடது கம்யூனிஸ்டு உறுப்பினர் உமாநாத, 'திம்மா ரெட்டி ஒரு கொலைகாரர்' என்று உரத்து முழங்கினர்; மற்றவர்கள், 'வெட்கம், வெட்கம்' என்று முழங்கினர்.)

திரு. இரா. செழியன் மேலும் கூறியதாவது:—

"ஒரு மாநில அமைச்சர்மீது நாடாளுமன்றம் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை; ஆனல், இதை ஆந்திர முதலமைச்சர், ஆந்திரச் சட்டமன்றம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் மனச்சாட்சிக்கே விட்டுவிடலாம்."

'ஊழியர்களைக் குறைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை'

அமைச்சர் முத்துசாமி திட்டவட்ட அறிவிப்பு

திருச்சி, மே 9—

"ஊராட்சி ஒன்றியங்களில் தற்போது பணியாற்றிவரும் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் நோக்கம் அரசுக்கு இல்லை"

என்று உள்ளாட்சித்துறை யமைச்சர் முத்துசாமி அவர்கள், திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

செல்லாக் காசான காங்கிரசாருக்குப் புதிய பதவி!

வேலை தேடித்தரும் நிலையமாக அ. இ. கா. க. அலுவலகம்

நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தினர் சுதந்தராக் கட்சி உறுப்பினர்

புதுடில்லி, மே 8—

"செல்லாக் காசாகிவிட்ட காங்கிரசுக்காரர்களுக்கெல்லாம் பதவி கிடைக்கச் செய்யும் மிக முக்கியமான வேலை தேடித்தரும் நிலைய'மாகத் திகழ்கிறது டில்லி ஜந்தர் மந்தர் சாலையில் உள்ள ஏழாம் எண் கட்டிடம் (அகில இந்தியக் காங்கிரசு அலுவலகம்)"

என்று, சுதந்தராக் கட்சியைச் சேர்ந்த திரு. லோகநாத மிஸ்ரா நாடாளுமன்ற மேலவையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நிதி மசோதாவின்மீது அவர் பேசுகையில், கடந்த பொதுத்தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட முக்கிய காங்கிரசுக்காரர்களில் பதவி பெற்றுள்ளவர்களின் பெயர்களையெல்லாம் சொன்னர்.

இந்த நேரத்தில் துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி குறுக்கிட்டு, 'இந்தப் பதவி நியமனங்கள் முறைகேடாகச் செய்யப்படவில்லை. தேர்தலில் தோற்றுவிட்டதனலேயே அவர்கள் அங்கப் பதவிகளுக்குத் தகுதியற்றவர்கள் என்று கூறிவிட முடியாது' என்று கூறினர்.

திரு. மிஸ்ரா வெளியிட்ட பட்டியலில் உள்ள பெயர்கள் வருமாறு:—

ஏ. எம். தாமஸ்—(ஆஸ்திரேலியாவில் இந்தியாவின தூதுவர்)

இராஜ் பகதூர்—(நேபாளத்தில் இந்தியத தூதுவர்)

ஓ. வி. அழகேசன்—(எத்தியோப்பியாவில் இந்தியத் தூதுவர்)

பி. எஸ். நாஸ்கர்—(நியூஜிலாந்தில் இந்தியத் தூதுவராகப் பதவியேற்க இருப்பவர்)

சி. சுப்பிரமணியம் — (விமான ஆலாசனைக் குழுத் தலைவர்)

கே. டி. மாளவியா—(கனரகப் பொறியியல் கார்ப்பரேஷன் தலைவர்)

மனுபாய் ஷா—(பர்மா—இலங்கை அகதிகட்கு மறுவாழ் வளிப்புக் குழுவின் தலைவர்)

ஆர். ஆர். மொரார்க்கா—(ஆயுள் இன்சூரன்சு நிறுவனத்தின் செலவினக் குழுத் தலைவர்)

மகாவீர் தியாகி — (ஐந்தாவது நிதிக் குழுவின் தலைவர்)

இந்தப் பட்டியலின் தொடர்ச்சியாக ஜனசங்க உறுப்பினரான திரு. நிரஞ்சன் வர்மா, ஒரு பெயரைச் சொன்னர்; அதாவது திருமதி மமூனு சுல்தானு (முன்னள் மக்களவை உறுப்பினர்; இப்போது போபால் கனரக மின்சார நிறுவனத்தில் ஓர் இயக்குநர்)

இந்தித் திணிப்பை எதிர்க்கப் புதிய ஏற்பாடு

4 தென் மாநிலங்களும் இணைந்து போராடும்

கேரளத்தின் முன்முயற்சி -- அண்ணாவைக் கலந்தபின் இறுதி முடிவு

திருவனந்தபுரம், மே 8—

நான்கு தென்மாநிலங்களும் இணைந்து நின்று இந்தித் திணிப்பை எதிர்த்து இயக்கம் நடத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

கேரள இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவினர் இந்த முயற்சியில் முன்னின்று செயலாற்றி வருகின்றனர்.

கேரள இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுவின் தலைவரும் திருவனந்தபுரத்தைச் சேர்ந்த வழக்கறிஞருமான திரு. எம். என். பரமேசுவரம் பிள்ளை, முன்னள் நாடாளுமன்ற உறுப்பினரும் 'கேரள கௌமதி' என்ற மலையாள நாளிதழின் ஆசிரியருமான திரு. எம் கே. குமரன் ஆகிய இருவரும், இதுபற்றி இன்று செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

"தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தாயகம் திரும்பியதும் அவருடன் தொடர்பு கொண்டு ஆவன செய்யப்போகிறோம்" என்றும் அவர்கள் கூறினர்.

"ஆந்திர—கருநாடக மாநிலங்களின் தலைவர்களுடனும் தொடர்பு கொண்டு, தென்னக முழுமைக்கும் பிரதிநிதித்துவம் வாய்ந்த குழு ஒன்றை விரைவில் அமைக்க இருக்கிறோம்" என்றும் அவர்கள் கூறினர்.

"இந்தி ஒரு மொழி என்ற அளவில் அதனை எதிர்க்கவில்லை; ஆங்கிலத்தை ஒழித்துவிட்டு அந்த இடத்தில் இந்தி ஆட்சிமொழியாக்கப்படுவதைத்தான் எதிர்க்கிறோம்" என்றும் அவர்கள் விளக்கினர்.

திரு. குமரன் மேலும் கூறியதாவது:—

"நான்காவது திட்டத்தில் இந்திய மொழிகள் வளர்ச்சிக்காக ரூ. 11 கோடிக்கு வகை செய்யப்பட்டுள்ளது; அதில் ரூ. 9.5 கோடி இந்திக்கும், ரூ. 50 இலட்சம் சமஸ்கிருதத்துக்கும் செலவிடப்படும்; எஞ்சியுள்ள ரூ. 1 கோடியைத்தான் மற்ற எல்லா மொழிகளுக்கும் பிரித்துக் கொடுக்க வேண்டுமாம். ஏன் இந்தப் பாகுபாடு?

"இந்தியும், மற்ற மொழிகளைப் போன்ற ஒன்ருகவே கருதப்பட வேண்டும்."

திரு. பரமேசுவரம் பிள்ளை கூறியதாவது:—

"எல்லாவற்றையும் இந்தியில் மொழிபெயர்ப்பது என்பது நீதித்துறையைப் பொறுத்து இயலக்கூடியதல்ல; உலகின் பல பாகங்களிலிருந்தும் மாசந்தோறும் ஏறக்குறைய 600 சட்ட இயல் இதழ்களும், 12,000 பிற ஏடுகளும் வருகின்றன. அவற்றை மொழிபெயர்த்து முடிவதற்குமுன் அதே அளவுக்கு மற்றொரு புதிய சுமை வந்து சேர்ந்துவிடும்.

"இந்தியா போன்ற ஒரு கூட்டாட்சி முறையுள்ள நாட்டில், ஒரே ஒரு மொழியை மட்டுமே தான் ஆட்சிமொழியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதில்லை"

என்பதை இருவரும் சுட்டிக்காட்டினர். அவர்கள் மேலும் கூறியிருப்பதாவது:—

"தொடர்பு மொழி நிலையிலிருந்து ஆங்கிலம் அகற்றப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படவில்லை. தொடர்பு மொழியை அரசின் பல்வேறு அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்கள் அறிந்திருந்தாலே போதும், உழவர்களும், தொழிலாளர்களும் அறிந்திருக்க வேண்டும் என்பதில்லை. ஆனல் தற்போது அவர்களும்கூட ஆங்கிலத்தை அறிந்திருக்கும் அளவுக்கு இந்தியை அறிந்திருக்கவில்லை."

காந்திக்குத் துரோகமிழைக்கும் இந்தி வெறியர்கள்!

திருவனந்தபுரம், மே 9—

"உலகில் 75 நாடுகளில் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது; அவற்றில் 40 நாடுகளில் கட்டாயமாகக் கற்பிக்கப்படுகின்றன"

என்று ஐ. நா. பொதுசெயலாளர் தெரிவித்துள்ளதை, திருவனந்தபுரம் மாவட்ட இந்தி ஆதிக்க எதிர்ப்புக் குழுத் தலைவர் திரு. எம். கே. குமரன் (வலது கம்யூனிஸ்டு) சுட்டிக்காட்டினர்.

"இந்த நிலை, சோஷலிச நாடுகளில்கூட வளர்ந்து வருகிறது" என்ருர் அவர்.

"காந்தியார்கூட இந்துஸ்தானிக்குத்தான் ஆதரவளித்தாரே தவிர, தற்போது இந்தி வெறியர்கள் குறிப்பிடும் இந்திக்கு அல்ல"

என்ருர் அவர்.

"இந்தி வெறியர்கள் மொழிப் பிரச்சினையில் மட்டுமல்ல—பல வகையிலும் காந்திக்குத் துரோகம் இழைத்துள்ளனர்"

என்ருர் அவர்.

அண்ணாவுக்குப் புரிகிறது!

அழகுக்கு- அதிகார நிறைவுக்கு இருக்கிறதே தவிர பலனுக்காக அல்ல!

இங்கே விலை ரூ. 120! அங்கே விலை ரூ. 750!

"அண்ணாதுரை, நியூயார்க்கிலுள்ள 'சோனா' என்ற இந்தியக் கைத்தறிப் பட்டுத் துணிக் கடைக்குச் சென்றார்; அங்கே ஓர் அழகிய வெள்ளைக்காரப் பெண், சேலையுடுத்தி அண்ணாவை வரவேற்கிறார்.........

"காஞ்சீபுரம் மனிதர், நியூயார்க்கிற்கு வந்து, காஞ்சீபுரத்தைக் கண்டு களிக்கிறார்; அதாவது, காஞ்சீபுரம் பட்டுச் சேலைகளைப் பாராட்டுகிறார்!

"ஒரு சாதாரணப் பட்டுச் சேலையின் விலையைக் கேட்கிறார்; விலை, 'நூறு டாலர்' என்கிறார்கள்!

"'நூறு டாலர் என்றால், ரூ. 750 ஆகிறது; காஞ்சியிலோ, சென்னையிலோ ரூ. 120-க்கு வாங்கலாமே' என்று எண்ணுகிறார்!

"'ஏன், காஞ்சீபுரம் சேலைகளோ, பிற இந்தியப் பொருள்களோ, அமெரிக்காவில் அதிகம் விலை போவதில்லை' என்று அண்ணாவுக்கு இப்போது புரிகிறது!

"பல அமெரிக்கர்களுக்குப் பட்டுமீது மோகம்தான்; ஆனால், எந்தப் பொருளுக்கும் அனாவசியமாக ஒரு காசு அதிகம் தர அமெரிக்கர்கள் முன் வருவதில்லை!

"'நான், பிற நாட்டுப் பொருள்களோடு நம் பொருள்களின் விலைகளை ஒப்பிட்டுப் பார்த்தேன்; ஏன் இப்படி விற்கிறார்கள் இங்கே என்று எனக்குப் புரியவில்லை' என்கிறார்—ஐ. நா.-வின் பொருளாதார நிபுணர் கிருஷ்ணன்.

"'விலையைக் குறைத்து, பல கடைகளில் அமெரிக்கா முழுவதும் ஒரு செயின் ஸ்டோர் மூலம் விற்றால், காஞ்சீபுரம் சேலைகள் நிறைய விற்குமே; யாராவது செயின் ஸ்டோர் மனிதரை இது விஷயமாக அணுக முடியுமா பாருங்கள்' என்கிறார் அண்ணா—அருகிலுள்ளவரிடம்.

"மற்றும் சென்னையிலிருந்து வந்த கூடைகள், வெண்கலப் பித்தளைச் சாமான்கள் அங்கே காட்சியளிக்கின்றன.

"இதில் வேடிக்கையும், வேதனையும் என்னவென்றால், நமது கூடைகளும், பிற பொருள்களும் கிடைக்குமிடம் நியூயார்க்கில் 'சோனா' கடை ஒன்றுதான்; ஆனால் அமெரிக்கா முழுவதிலும் உள்ள பெரிய மலிவு விலைக் கடைகளிலெல்லாம் (Discount stores)—மட்டைக் கயிறு, பித்தளைக் குதிரை, வெணகல யானை, மூங்கில் கூடை, கோரைப் பாய் எல்லாம் ஜப்பான், ஹாங்காங், பிலிப்பைன் முதலிய நாடுகளிலிருந்து வந்து நிரம்பி விற்பனையாகின்றன!

"'ஒரு வெண்கல யானையை நிஜ யானை விலை சொன்னால் அமெரிக்கன், நிஜ யானையையே வாங்கிவிட்டுப் போகிறான்' என்கிறார் கிருஷ்ணன்!

"இந்தக் குறையில் புதுமை எதும் இல்லை; இதுதான் நமது வழக்கம்.

'சோனா' என்ற இடம், இந்தியாவிலிருக்கும் எத்தனையோ ஆராய்ச்சிக்கூடங்கள் போல—அழகுக்காக, அதிகார நிறைவிற்காக இருக்கிறதே தவிர,

பலனுக்காக இல்லை!

"என்றுதான் நம் அதிகாரிகள், 'தொழில் செய்வது இலாபத்திற்காக' என்று உணர்வார்களோ?

--எம். எஸ். உதயமூர்த்தி

('ஆனந்த விகடன்' சிறப்புக் கட்டுரையில்)

பயன் தந்த ஒரு சந்திப்பு!

"சனி காலை மணி 11. அண்ணாதுரை, நியூயார்க்கின் நகர துணை மேயர்களில் ஒருவரான பர்சி சட்டனுடன் பேச ஏற்பாடாகி இருக்கிறது. அன்று அங்கே பெரிய மாநாடு ஏற்பாடாகி இருக்கிறது. நமது ஊர்போல பெரும் மாநாடுகள் இங்கு நடைபெறுவது அபூர்வம். சிறு சிறு கூட்டங்களாகத் தலைவர்கள், ஆலோசனை நடத்துவார்கள்; பின், தலைவர்களின் கூட்டம் நடைபெறும். நீக்ரோக்களின் புனரமைப்புப் பற்றிய அப்படி ஒரு முக்கியமான கூட்டம் இன்று இங்கே நடைபெறுகிறது.

"மார்டின் லூதர் கிங் சுடப்பட்ட சமயம் மற்ற எல்லா நகரங்களிலும் கலவரம் நிகழ்ந்தபோது, இங்கு நியூயார்க்கில் கலவரம் நிகழா வண்ணம் மேயர் லிண்சேயும், பர்சி சட்டனும் நீக்ரோக்களிடையே பழகிப் பேசி, பார்த்துக்கொண்டார்கள்.

"சட்டனிடம் அண்ணாதுரை, சேரிப் பிரச்சினை, கிராமத்திலிருந்து வருவோரது புனரமைப்பு, சுகாதாரம் பற்றி பல கேள்விகள் கேட்கிறார்; 'பயன் தந்த ஒரு சந்திப்பு' என்று குறிப்பிடுகிறார் அண்ணா!

அப்படித்தான் அண்ணா கூறியிருப்பார்

"பின் இருவரும், 'ஹார்லம்' எனப்படும் நீக்ரோவாழ் பகுதிகளைச் சுற்றிப் பார்க்கக் காரில் புறப்படுகிறார்கள். ஹார்லத்தில் உள்ள பூங்காவில் இரவு வேளைகளில் சென்றால் திருட்டு, கொள்ளை, கொலை நடக்குமாம்.

"இப்படிப்பட்ட இடத்தில் அண்ணாதுரை, 'இறங்கி நடக்கலாமே' என்கிறார். பர்சி சட்டனும், அண்ணாவும் நீக்ரோவாழ் பகுதியில் நடக்கிறார்கள். பல நீக்ரோக்களுடன், 'அலோ' என்ற அறிமுக விசாரணை—கைகுலுக்கல்! கறுப்பு மனிதர்கள், காக்கி மனிதர்களின் தலைவர்களைப் பார்க்கிறார்கள். 'ஐ மேன்! வீர் ஆர் யு ப்ரம்?' என்று நீக்ரோவுக்கே உரித்தான ஆங்கிலத்தில் கேட்டிருந்தால், 'மொழிபெயர்க்க' என்று அண்ணா கூறியிருப்பார்!

சிங்கப்பூரில் என்னுடன் சேர்ந்துகொள்வார்கள்

"மறுநாள் அண்ணா, நயாகரா சென்றார். நயாகராவைத் தனியே சென்று பார்க்க விரும்புவதாகவும், பத்திரிகை நிருபர்கள் வரவேண்டாம் என்றும் திரு. சொக்கலிங்கம் கூறியதன்பேரில், நிருபர்கள் ஒருவரும் நயாகரா செல்லவில்லை. மேலும், நயாகரா, முக்கியமாகத் தேனிலவுக்காகப் புது மணத் தம்பதிகளே செல்லும் இடமாதலாலும், நான் தேனிலவை நயாகராவில் கொண்டாடி விட்டதாலும் அண்ணாவைத் தொடரவில்லை!

"நயாகராவையும் தேனிலவையும் மனத்தில் கொண்டு, 'ஏன் நீங்கள், தங்கள் மனைவியை அழைத்து வரவில்லை' என்று அண்ணாவைக் கேட்கிறேன்; 'அவர்களுக்கு நல்ல உடம்பு இல்லை. அவர்களுக்கு சிங்கப்பூர் பிடிக்கும். இன்று அவர்களிடம் டெலிபோனில் பேசினேன். சிங்கப்பூரில் அவர்கள் என்னுடன் சேர்ந்து கொள்வார்கள்' என்கிறார்!

மேடைத் தமிழ் முத்திரைகளை கேட்க முடிந்தது!

"நயாகராவை மிகவும் ரசித்ததாக அண்ணா கூறினார். 'வாய்ஸ் ஆப் அமெரிக்கா'வுக்கு நிகழ்ந்த பேட்டியில், அண்ணாவின் மேடைத் தமிழ் முத்திரைகளை முதன்முறையாகக் கேட்க முடிந்தது; 'நயாகரா நீர் வீழ்ச்சியைப் பார்த்தோம்; கனடா பக்கம் போய்ப் பார்த்தோம்; அது ஓர் எழில் தோட்டம்'—வெகு ரம்மியமாக இருந்தது: அமெரிக்கா பக்கம் அவ்வளவு இல்லை — ஒரே தொழில்மயமாக இருந்தது.'

"அங்கே திரு. இராஜம் இராமசாமியைக் கண்டதாகவும், அண்ணாவின் வசதிகள் பற்றி அக்கறையோடு இராஜம் இராமசாமி விசாரித்தார் என்றும் கூறினார்.

'இராஜம் இராமசாமி, சென்னையில், தி.மு.க.-வுக்கு எதிராக நின்ற காங்கிரசுக்காரர் அல்லவா?

மனோபாவம் மாறிவிடும்

"'இந்த ஊரில் தேர்தல் நடக்கும் வரைதான் கட்சி வேறுபாடுகள்; தேர்தல் முடிந்ததும் அவர்கள், கட்சி பற்றி நினைப்பதே இல்லை. நம் ஊரிலோ என்றால், எதிர்க் கட்சிக்காரனை எதிரியாகவே பெரும்பாலோர் கருதுகிறார்களே, ஏன்' என்று ஒரு முறை அண்ணாவைக் கேட்டேன்.

"'இன்னும் இரண்டு மூன்று முறை தேர்தல் வந்து ஆளுங் கட்சி மாறிக்கொண்டே இருக்குமானால், இந்த மனோபாவம் மாறிவிடும்'' என்றார் அண்ணா.

இப்போது தமிழகம் உபரி மாநிலம்!

"நயாகராவுக்குப் பின் கன்னெடிக்கட் மாநிலத்தில் உள்ள 'லேக்வில்' என்ற கிராமத்தில் உள்ள ஒரு பண்ணையில் இரவைக் கழித்தார். பண்ணையின் சொந்தக்காரர் மிஸ்டர் பிரிஸ்கோ, முன்னாளைய ஆசிரியர். இப்போது மாநில விவசாயப் போர்டின் தலைவராக இருக்கிறார்.

"கிராம வாழ்க்கையில் நேரம் ஒரு பொருட்டல்ல. அண்ணா சாவதானமாக எழுந்து, காலை உணவை குடும்பத்தினருடன் -- மேசையில் அருந்துகிறார். விவசாய சம்பந்தமான பல பிரச்சினைகளை மிஸ்டர் பிரிஸ்கோவிடம் கேட்கிறார். பின்னால் நிகழ்ந்த பல பேட்டிகளில் -- விவாதங்களில் அவரது கருத்துக்கள் வெளிவருகின்றன.

"'உங்கள் பண்ணையில் 200, 300 ஏகர் என்று வைத்துக்கொண்டு பெரிய இயந்திரங்களுடன் விவசாயம் பண்ணுகிறீர்கள். எங்கள் நாட்டிலோ, '30 ஏகருக்குமேல் ஒருவர் வைத்துக்கொள்ளக் கூடாது' என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். எங்கள் ஊரில் மக்கள் தொகை அதிகம். ஆகவே, உங்கள் முறைகளை காப்பியடிக்க முடியாது. எங்கள் நிலங்களுக்கேற்ப விவசாய அபிவிருத்தி செய்கிறோம்—நல்ல விதை, உரம், பூச்சி மருந்து என! இப்போது தமிழகம், சிறு உபரி மாநிலம்' என்கிறார் அண்ணா!''

--எம். எஸ். உதயமூர்த்தி

('ஆனந்த விகடன்' சிறப்புக் கட்டுரையில்)

தொழில் தகராறுகளைத் தீர்க்க முக்கூட்டு நீதிமன்றம்

அமைச்சர் மாதவன் தரும் புதிய திட்டம்--- தொழிலாளர் அமைப்புகளுக்கு அழைப்பு

சென்னை, மே 9—

அனைத்துத் தொழிற் சங்கங்களின் சார்பில் ஆவடியில் நடைபெற்ற மே நாள் விழாவில் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் செ. மாதவன் ஆற்றிய உரையின் சில பகுதிகள் இங்கு தரப்படுகின்றன :—

அரசுக்கு இருக்கும் அதிகாரம்தான் என்ன?

"போராட்டங்கள் நடத்தப்படும்போது, அந்தப் போராட்டங்களின் பலனை உணர்ந்து நடத்தவேண்டும்.

"இன்று தொழிலாளர் நிலை என்ன? தொழிற் சங்கம் ஒரு ரூபாய் கூலி உயர்வு கேட்க—முதலாளி 'நான்கு அணா மட்டுமே தருவேன' என்று சொல்ல—முடிவாக எட்டணாக் கூலி உயர்வுக்குச் சமாதானம் செய்துவைக்கும் நிலைமைதான் அரசுக்கு ஏற்படுகிறது!

'இந்தப் பேரம் பேசும் நிலைமை இருதரப்பிலும் இருப்பதால்தான், இடையில் அரசியல் நுழைந்துவிடுகிறது!

"நீதிமன்றமே தீர்ப்பு அளித்தாலும், அத்தீர்ப்பை முதலாளியை அமுலாக்கச் செய்யும் அதிகாரம் அரசுக்கு இல்லை!

ஒன்று சேருங்கள்!

"இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் பஞ்சத்தால்--பட்டினியால் வாடும்போது, அந்த நிலைமையை மாற்றும் அதிகாரம் அரசுக்கு இல்லை; ஆகவேதான், தொழிற் சங்கத் தலைவர்களை ஒன்று சேரும்படி கேட்கிறோம்.

உற்பத்தி குறையாது!

"தமிழ்நாட்டில் எந்தத் தொழிற்சாலையிலும்--எப்போதும் வேலை நிறுத்தம், கதவடைப்பு, 'லே—ஆப்', தற்காலிக உற்பத்தி நிறுத்தம் ஆகியவை இருக்கக்கூடாது; இதை அனைவரும் ஒப்புக்கொண்டால், உற்பத்தி குறையாது--பொருளாதார மந்தம் ஏற்படாது!

முக்கூட்டு நீதிமன்றமே பிரச்னைக்குப் பரிகாரம்

"எந்தத் தொழிற்சாலையிலும், எந்தத் தொழில் பிரச்சினையானாலும் சரி—முதலில் அது பற்றி சமரசம் ஏற்பட விவாதிப்பது; அந்தச் சமரசப் பேச்சுவார்த்தையில் ஒப்பந்தம் ஏற்படாவிட்டால், அரசாங்கம் அமைக்கும் முக்கூட்டு நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு அப்பிரச்சினையை அனுப்பிவைப்பது, அந்த முக்கூட்டு நீதிமன்றத்தில் தொழிலாளர் தலைவர் ஒருவர்—தொழிலதிபர் பிரதிநிதி ஒருவர்—முதிர்ந்த அனுபவமுள்ள உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவரைத் தலைவராக நியமித்து இந்த முக்கூட்டு நீதிமன்றம் அமைப்போம். இந்தத் தொழில் தகராறை அந்த முக்கூட்டு நீதிமன்றம் விசாரித்து அளிக்கும் தீர்ப்புதான் இறுதியான தீர்ப்பு; அதை மீற யாராலும் முடியாது!

அரசு ஏற்கும்!

"அப்படி எந்தத் தரப்பிலாவது மீறப்படுமானால், அதை அமுல் படுத்தும் அதிகாரம் அரசுக்கு இருக்கும்; உதாரணமாக, 'வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்' என்று அந்த நீதிமன்றம் தீர்ப்பு அளிக்க—அதை அந்த நிர்வாகம் அமுல்படுத்தாமல் போகுமானால், பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்குச் சம்பளம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் நிர்வாகத்திடமிருந்து பெற்றுத் தரும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளும்.

பிரச்சினைகள் தீரும்!

"இப்படிப்பட்ட கட்டாய அமுல் படுத்தும் முறையைக் கொண்டு வந்தால்தான், தொழிற் தகராறு பிரச்சினைகள் தீரும்!''

கோவைத் தொழிலாளர் போராட்டம்

நான்கு காரணங்கள்

"கோவையில் ஆலைத் தொழிலாளர் போராட்டம் நடைபெறுகிறது; இந்தப் போராட்டத்துக்குப் பின்னணி என்ன என்பதை உணரவேண்டும்.

"ஒன்று—மத்திய அரசின் வரிக் கொள்கை.

இரண்டாவது—தமிழ்நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளுக்குத் தேவையான பருத்தி, இங்கில்லாமல் வடநாட்டிலிருந்து வர வேண்டிய நிலை.

மூன்றாவது — நூற்ற நூலைத் துணியாக நெசவு செய்யும் ஆலை இங்கு இல்லாதது.

நான்காவது— நாம் அனுப்பும் நூலை ஆமதாபாத் துணியாக்கி நமக்கே இரட்டிப்பு விலைக்கு அனுப்பும் முட்டாள் தனமான பொருளாதாரக் கொள்கை!''

--அமைச்சர் செ. மாதவன்

(ஆவடி மே நாள் விழாவில்)

பறக்கும 'ஆபரேஷன்' அறை!

வியட்நாம் போரில் காயமடைந்தவர்களுக்கு உதவி செய்வதற்காக 'பறக்கும் அறுவைச் சிகிச்சை அறை' ஒன்றை ஜெர்மன் செஞ்சிலுவை சங்கம் அன்பளிப்பாக அளித்துள்ளது. இதன் மதிப்பு ரூ 18,70,000.

ஹெலிகாப்டர் விமானம், இந்த 'ஆபரேஷன்' அறையை தூக்கிச் சென்று அவசியமான இடத்தில் வைத்துவிடும். நவீன மருத்துவச் சிகிச்சைத் தியேட்டருக்குத் தேவையான எல்லா விதமான நவீன மருத்துவக் கருவிகளும், இந்த அறையில் இருக்கின்றன.

யேமன் போரிலும், இந்த 'பறக்கும் ஆபரேஷன் அறை' பணியாற்றியிருக்கிறது.

'சுயநலவாதிகளின் எதிர்ப்பை பொருட்படுத்த வேண்டாம்'

புதுவைக்கு மத்தியச் சட்டம்-- வெ. கிருஷ்ணமூர்த்தி வரவேற்பு

புதுடில்லி, மே 7—
மத்திய அரசின் பல்வேறு சட்டங்களைப் புதுவை மாநிலத்துக்கு விரிவுபடுத்துவதற்கான மசோதா ஒன்று மக்களவையில் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதன் மீதான விவாதத்தில் கலந்துகொண்ட கழக உறுப்பினர் வழக்கறிஞர் வெ. கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:—

"புதுவை மாநில நீதிமன்றத்தில் தொழில் நடத்தும் 17 வழக்கறிஞர்களில் நால்வர் தான் இந்த மசோதாவை எதிர்க்கின்றனர்!

"சுயநலத்தின் அடிப்படையிலேயே அவர்கள் எதிர்க்கின்றனர்; அதை மத்திய அரசு எதிர்த்தாக வேண்டும்.

"இந்தியத் தண்டனை இயல் சட்டமும், குற்ற இயல் சட்டமும் புதுவை மாநிலத்தில் பயன்படுத்தப்படும்போது பிற மத்திய சட்டங்களையும் அங்கு விரிவுபடுத்தப்படுவது ஏன் தாமதப்படுத்தப்பட வேண்டும்?"

புதுச்சேரியின் ஒரே பிரதிநிதியாக மக்களவையிலுள்ள என். சேதுராமனும், மத்தியச் சட்டங்களைப் புதுவைக்கு விரிவுபடுத்துவதை வரவேற்றார்.

இதோ -- மற்றொரு 'புதிய சேனை'!

கட்டாக், மே 8—
'உத்ரலால் சேனை' என்ற பெயரில் ஒரிசாவிலும் ஓர் புதிய அமைப்பு உருவாக்கப்பட்டிருக்கிறது.

இது, அரசியல் கலப்பற்ற நிறுவனமாம்; நாட்டின் ஒருமைப்பாட்டைக் கருத்திலிருத்துமாம்; லஞ்ச ஊழலை எதிர்த்துப் போராடுமாம்; மாநிலத்தில், மொழிப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கப் பாடுபடுமாம்;—இவ்வாறெல்லாம் அதன் அமைப்பாளர்கள் கூறியுள்ளனர்.

வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு மாநில அரசை வற்புறுத்துமாம்.

பாரதிக்கு நினைவுச் சின்னம்

புதுவை, மே 8—
"புதுவை ஈசுவரன் கோயில் வீதியிலுள்ள தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார் வாழ்ந்துவந்த வீட்டை வாங்குவதற்கு, அரசு, ரூ. 25,000 ஒதுக்கியிருக்கிறது"

என், புதுவை கல்வி நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த வீட்டில், பாரதியார் நூல்கள்—நூலகம் அமையுமாம்.

எம். ஜி. ஆர். தலைமையில் திருமணம்

சென்னை, மே 7—
சிட்லப்பாக்கம் ஊராட்சிமன்றத் தலைவரும் தி. மு. க. தொண்டருமான தோழர் டி. சக்கரபாணிக்கும்-செல்வி இராணிக்கும் 5 5-68 காலை பறங்கிமலைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் புரட்சி நடிகர் எம். ஜி இராமச்சந்திரன் தலைமையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

திருமணத்திற்கு வந்திருந்தோரை தோழர் என். சி. கிருட்டினன் வரவேற்றார்.

மங்கல நாணை எம். ஜி ஆர். அவர்கள் வாழ்த்திக் கொடுத்த பின், மணமகன், மணமகளுக்கு சூட்டினார்.

மணமக்களை வாழ்த்தித் திருப்போரூர்த் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் தோழர் முனு. ஆதி, ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் தோழர் என். வீராசாமி ஆகியோர் பேசினர்.

இத்திருமணத்தின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

[நன்கொடை வரப்பெற்றோம். நன்றி—பொறுப்பாளர்.]

பர்கூர் மலைவாழ் மக்களின் நெடுநாள் குறை நீங்கியது

பவானியிலிருந்து பஸ் போக்குவரத்து துவக்கம்

பவானியிலிருந்து அந்தியூர் வழியாகப் பர்கூர் மலைக்கு நட்டக்கரை வரை பஸ் போக்குவரத்து 3-5-68 முதல் தொடங்கியிருக்கிறது.

பர்கூர் மலையில் வாழும் மக்களின் நெடுநாளைய குறை, இதன் மூலம் நிறைவேறியது.

இதற்கான 'மகிழ்ச்சி விழா'வை அந்தியூர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் கே. கே. சுப்பிரமணியம் தலைமையில் பர்கூரில் 3-5-68 அன்று நடந்தது. அந்தியூர் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் இ. எம். நடராசன் பி.ஏ.பி.எல். பேசுகையில் பர்கூர் மலைவாழ் மக்களின் நெடுநாளைய ஆவலை நிறைவு செய்வதில் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிபற்றியும், அவர்கள் நலனிலும் அவர்களுக்கென சேவை செய்வதிலும் அவர்களுடைய குறைகளைப் போக்குவதிலும் தாம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதாகவும் கூறினார்.

அந்தியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையர் டி. கே. வெங்கடாசலம் எம்.ஏ., பர்கூர் மலைப் பகுதிகளில் உள்ள பள்ளிகளில் கல்வி அறிவு பெற குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டார்.

அந்தியூர் சரக பள்ளித் துணைத் தணிக்கையர் கிருட்டினசாமி, கல்வித் தரம் உயர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் தனது முடிவுரையில், பர்கூர்வாழ் மக்களுக்கு தாய்-சேய் நல வசதிக்காக மருத்துவ மாது, மருத்துவ ஆயா விரைவில் நியமிக்கப்படுவர் என்று கூறினார்.

பர்கூர் ஊராட்சித் தலைவர் செகராயன் விழாவில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

வடகாடு உயர்நிலைப்பள்ளி இலக்கிய மன்ற விழா

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வடகாடு உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்ற ஆண்டுவிழா, 3—5—68-ல் நடைபெற்றது.

விழாவிற்கு திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம் தலைமை வகித்து பேரறிஞர் அண்ணா அவர்களின உருவப்படத்தைத் திறந்து வைத்தார்.

ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு கே. வி. சுப்பையா பி.ஏ, திருவள்ளுவர் உருவப் படத்தைத் திறந்துவைத்து வள்ளுவரின் பெருமைகளைப் பற்றிக் கூறினார்.

ஆலங்குடி சரகப் பள்ளித் துணை ஆய்வாளர் எஸ். பாலசுப்ரமணியம், 'கருநெல்லிக்கனி' எனும் பொருள்பற்றி சிறப்புரை யாற்றினார்.

இலக்கியங்களில் திறமை பெற்ற மாணவர்களுக்கு திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பி. வேலாயுதம் பரிசுகள் வழங்கினார்.

வடகாடு கிராமத்திலுள்ள எம். ஜி. ஆர். மன்றத்தினரும், சிவாஜி கணேசன் மன்றத்தினரும் போட்டி போட்டுக்கொண்டு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்க அன்பளிப்புகள் தந்தனர்.

வடகாடு உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் நன்றி கூறினார்.

ஆலங்குடியில் பள்ளி ஆண்டு விழா

அமைச்சர்கள் படத் திறப்பு-- ஆசிரியருக்குப் பாராட்டு

30—4—68 அன்று திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகத்திற்குட்பட்ட ஆலங்குடி உயர்தர ஆரம்பப் பள்ளியின் ஆண்டு விழா நடைபெற்றது; ஆலங்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கே வி. சுப்பையா பி.ஏ. தலைமைவகித்தார்.

ஆலங்குடி பள்ளியில் சுமார் 40 ஆண்டு நற்பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர் ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்திக்கு திரு. அழகிரி செட்டியார் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

பள்ளி மாணவர்கள் தங்களின் அன்பளிப்பாக வெள்ளிப் பதக்கமும், ஆரஞ்சுப் பழமும் வழங்கினர்.

ஆசிரியர் இராமச்சந்திரன், செல்லுத்தம்பி கல்யாணி, தங்கவேல் ஆகியோரும் பொன்னாடை போர்த்தி, ஆசிரியரைப் பாராட்டினர்.

திரு ஏ. ஆர். கிருஷ்ணமூர்த்தி 40 ஆண்டுக் காலம் நற்பணியாற்றி, மாநில விருதும் பெற்றுள்ளார். ஆலங்குடி திரு சிவராம கிருஷ்ணன் ரூ 20-ம், ஒரு பூச்செண்டும் தமது அன்பளிப்பாக அளித்தார்.

பின்னர் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம் திருவள்ளுவரின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார். ஆலங்குடி பேரூராட்சி மன்றத் தலைவர் சுந்தரக்கண்ணு பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திறந்துவைத்து, 'வள்ளுவரின் மறுபிறப்பு அண்ணா' என்று உணர்ச்சி மிக்க முறையில் சொற்பொழிவாற்றினார்.

பின்னர் கல்வி அமைச்சர் திரு. நெடுஞ்செழியன் அவர்களின் உருவப் படத்தைத் திரு வகாப் திறந்துவைத்தார்.

ஆலங்குடி வட்ட தி மு க. செயலாளர் பாலகிருஷ்ணன், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய கல்வி வளர்ச்சி அலுவலர் முருகேசன், ஆலங்குடி சரக பள்ளித் துணை ஆய்வாளர் பாலசுப்பிரமணியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

மாணவ—மாணவிகளால் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சீரணி வேலைகளைச் சித்தரிக்கும் வகையில் மாணவர்கள் சிறந்த தோர் பாட்டினைத் தயாரித்து நடித்துக் காட்டினர். விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ஆலங்குடி பேரூராட்சி மன்ற உறுப்பினர் ரகமதுல்லா பரிசுகள் வழங்கினர். ஆலங்குடி பள்ளித் தலைமை ஆசிரியர் நன்றி கூறினார்.

வாராப்பூர் பள்ளி ஆண்டு விழா

திருவள்ளுவர், அண்ணா படத் திறப்பு

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள வாராப்பூர் உயர்தர ஆரம்பப் பள்ளி ஆண்டு விழா 28--4--68 அன்று திரு. முத்துக் கருப்பத் தேவர் தலைமையில் நடைபெற்றது.

ஒன்றிய ஆணையர் பெ. வேலாயுதம் திருவள்ளுவர் உருவப் படத்தையும், ஆலங்குடி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் கே. வி, சுப்பையா பி.ஏ., பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தையும், ஆலங்குடி வட்ட தி. மு. க. செயலாளர் பாலகிருஷ்ணன் தமிழகக் கல்வி அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்களின் உருவப் படத்தையும் திறந்து வைத்து தமிழக அரசு கல்விக்காக செய்துவரும் திட்டங்களைப் பற்றிப் பேசினர்.

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியச் சீரணித் தலைவர் அ. பெரியண்ணன், கல்வி வளர்ச்சி அலுவலர் எஸ். எம். முருகேசன் ஆகியோர் கிராம மக்களின் கடமைகள் பற்றிப் பேசினர்.

மாணவ--மாணவிகளின் கலா நிகழ்ச்சியும், நாடகமும் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

எங்கள் வெளியீடுகள்

முதலமைச்சர் **அறிஞர் அண்ணா** அவர்களின் அரிய நூல்கள்

கலிங்கராணி	3.50
ரோமாபுரி ராணிகள்	2.00
கம்பரசம்	1.50
இலட்சிய வரலாறு	1.00
கற்பனைச் சித்திரம்	1.00
சிறு கதைகள்	1.00
ஆறு கதைகள்	1.00
குமரிக்கோட்டம்	1.00
உலகப் பெரியார் காந்தி	1.00
கபோதிபுரக் காதல்	1.00

அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்களின் அரிய நூல்கள்

கலித்தொகை தரும் காதற் காட்சிகள்	2.50
மதமும் மூடநம்பிக்கையும்	2.00
பண்டைய கிரேக்கம்	1.00

அமைச்சர் மு. கருணாநிதி அவர்களின் அரிய நூல்கள்

வெள்ளிக்கிழமை	2.50
சுருளிமலை	2.50
பழக்கூடை	1.00
நாடும் நாடகமும்	1.00
நளாயினி	1.00
கண்ணடக்கம்	1.00
விடுதலைக் கிளர்ச்சி	1.00

அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்களின் அரிய நூல்கள்

நன்றி யாருக்கு?	1.00
அறிவின் தூதர்கள்	1.00
டாக்டரம்மா	1.00

கவிஞர் ஆனந்தம் அவர்களின் அரிய கவிதை நூல்

பூக்காடு	3.00

திராவிடப் பண்ணை, 34, சிந்தாமணி கடை வீதி, திருச்சி-2.

கரட்டூர் தொடக்கப் பள்ளி விளையாட்டு விழா

அந்தியூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கரட்டூர் தொடக்கப் பள்ளியின் மூன்றாவது ஆண்டு விளையாட்டு விழா 5—5—68-ல் நடைபெற்றது; ஊராட்சி ஒன்றியத் தலைவர் கே. கே. சுப்பிரமணியம் தலைமைதாங்கினார்.

அந்தியூர் நிலக்கிழார் கே. கே. தியாகராசன் கொடியேற்றினார்.

ஊராட்சி ஒன்றிய ஆணையர் டி. கே. வெங்கடாசலம் எம்.ஏ., அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

பள்ளிக் குழந்தைகளுக்காக விளையாட்டுப் போட்டி நடைபெற்றது.

அந்தியூர் சரக பள்ளித் துணைத் தணிக்கையாளர் மா. கிருஷ்ணசாமி கல்வியின் அவசியம்—கல்வியின் தரம் — விளையாட்டுகளில் மாணவர்களின் பங்கு — மதிய உணவு சீரான முறையில் போடுதல் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் இ. எம். நடராசன் பரிசுகள் வழங்கினார். போட்டியில் வெற்றி பெருதவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் கே கே. சுப்பிரமணியம், ஊராட்சி ஒன்றியத்தில் மத்திய மதிய உணவு நிலையம் அமைப்பதற்கு முயற்சி எடுத்துள்ளதாகவும் அத்தாணியில் ஆரம்ப சுகாதார நிலையம் விரைவில் ஆரம்பிக்கப்படுமென்றும் கூறினார். இந்த விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு கரட்டூர் பழனி கவுண்டர் அவர்கள் ஆண்டுதோறும் நன்கொடையாளராக இருந்து விளையாட்டு விழாவை நடத்தி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

குப்பாண்டம்பாளையம் நகராட்சி மன்றத் தலைவர் க. ரா. பழனிச்சாமி, விழாவில் கலந்துகொண்ட அனைவரையும் வரவேற்றார். தலைமையாசிரியர் கிருஷ்ணமூர்த்தி நன்றி நவின்றார்.

தத்தனேரி எம். ஜி. ஆர். மன்றம்

மதுரை நகர் 1-வது வட்டாரம் தத்தனேரி எம். ஜி. ஆர். மன்றப் பொது உறுப்பினர் கூட்டம் 28—4—68-ல், தோழர் இரா. வி. இராமசாமி தலைமையில் நடைபெற்றபோது, தேர்ந்தெடுக்கப்பட்ட மன்ற நிர்வாகிகள் வருமாறு:—

தலைவர்: ச. கருப்பையா; செயலாளர்: மது. டி. மணவாளன்; துணைச்செயலாளர்: ஆ. அழகர்; பொருளாளர்: சு. இராசு; செயற்குழு உறுப்பினர்கள்: அ. குமதிவாணன், பெ. பெரியசாமி, எஸ். ஆர். பெரியசாமி, ஏ. கே. சாமி, மு. மனோகரன், வி. சீனி, சற்குணபாக்கியநாதன்.

பேரூரில் சீரணியின் சீரிய பணிகள்

பேரூர், மே 3—
பேரூர் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையாளர் திரு. கே. கே. நடராசு பி.எஸ்.சி. தலைமையில் சீரணியினர் கூட்டம் நடைபெற்றது; அதுபோது, தங்கமாணிக்கம் (குனியமுத்தூர்) தலைவராகவும், ஆர். பரமானந்தம் (பேரூர்) செயலாளராகவும், வை. சொக்கலிங்கம் (தெலுங்கபாளையம்) பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பேரூரில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டிடக் கட்டுமான வேலையில் 6—5—68 முதல் ஈடுபட்டு முடிக்கவும், கோடைவிடுமுறையில் பேரூர் ஊராட்சி ஒன்றிய அனைத்துப் பள்ளிக் கட்டிடங்களுக்கும் வெள்ளையடிக்கவும், சிரவணபக்கண்பாளையத்தில் உள்ள குளத்தை ஒட்டிய வடிகாலைத் தூர் எடுத்து குளத்திற்குத் தண்ணீர் வர வழி வகை செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

எல்லைப்பட்டி பள்ளி ஆண்டுவிழா

அண்ணா--காமராசர் படத் திறப்பு

4—5—68 அன்று எல்லைப்பட்டி உயர்தர ஆரம்பப் பள்ளி ஆண்டு விழா நடைபெற்றது; ஆலங்குடி தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் கே வி. சுப்பையா பி ஏ. தலைமை வகித்து பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.

திருவரங்குளம் ஊராட்சி ஒன்றிய சீரணித் தலைவர் அ. பெரியண்ணன் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் உருவப் படத்தையும், கவிநாடு கீழவட்டம் ஊராட்சி மன்றத் தலைவர் அருங்குளலிங்கம் பாரதியார் உருவப் படத்தையும், ஏ. நத்தம்பண்ணை ஊராட்சி மன்றத் தலைவர் மலையாண்டி காமராசர் உருவப் படத்தையும் திறந்து வைத்தனர்.

புதுக்கோட்டை சரக இளம் பள்ளித் துணை ஆய்வாளர் தியோடர், மாணவர் பற்றிச் சொற்பொழிவாற்றினார்.

புதுக்கோட்டை சரக பள்ளித் துணை ஆய்வாளர் இராமனுதன், விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்.

பள்ளிப் பிள்ளைகளின் கலை நிகழ்ச்சிகளும் மாறுவேடப் போட்டிகளும் நடைபெற்றன.

எல்லைப்பட்டி உயர்தர ஆரம்பப் பள்ளியின் முன்னேற்றத்திற்காகப் பணியாற்றிவரும் பள்ளித் தலைமை ஆசிரியர் நாராயணசாமி அவர்களைப் பாராட்டிப் பேனா ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

ரூ. 11,000 மதிப்புள்ள அரிசி கைப்பற்றப்பட்டது

சென்னை, மே 9—

கடந்த செவ்வாயன்று சடற்கரை இரயில் நிலையத்தில், ரூ. 6,000 மதிப்புள்ள அரிசி மூட்டைகளைப் போலீசார் கைப்பற்றி சிவில் சப்ளை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த அரிசி மூட்டைகளுக்காக எவரும் உரிமை கொண்டாடவில்லை.

போலீசார் வந்திருப்பது தெரிந்ததும், அரிசிக் கடத்தல்காரர்கள், தப்பியோடிவிட்டனர்.

புதனன்று மூன்று இரயில் நிலையங்களில்—மூன்று இரயில்களில் சோதனையிடப்பட்டு ரூ. 5,000 மதிப்புள்ள 155 அரிசி மூட்டைகளைப் போலீசார் கைப்பற்றினர்.

இந்த அரிசி மூட்டைகள்மீது எவரும் உரிமை கொண்டாடவில்லையாதலால், அம்மூட்டைகள், செங்கற்பட்டு தாசில்தாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

நான்கு இரயில் நிலையங்களிலுமாக மொத்தம் ரூ. 11,000 மதிப்புள்ள அரிசி கைப்பற்றப்பட்டிருக்கிறது.

சென்னை மக்களுக்கு மண்ணெண்ணெய் அதிகரிப்பு !

டி. யு. சி. எஸ். மூலம் விற்பதற்கும் ஏற்பாடு

சென்னை, மே 9—

சென்னை நகரில் மண்ணெண்ணெய்த் தேவை அதிகரித்திருப்பதைச் சமாளிக்கும்பொருட்டு, வழக்கமாக வழங்கப்படும் 100 கிலோ லிட்டரிலிருந்து 150 கிலோ லிட்டராக அதனை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது'

உண்மையாகவே மண்ணெண்ணெய்த் தேவைப்படுவோருக்கு—அவர்கள் 'பங்கீடு' கார்டு வைத்திருந்தாலும் வைத்திருக்காவிட்டாலும்—டி.யு சி எஸ். மூலம் வழங்குவதென அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். 'இவ்வளவுதான் தரப்படும்' என்ற வரம்பு இருக்காது; தேவையைப் பொறுத்து கேட்கப்படும் அளவை வழங்குவதென அரசு திட்டமிட்டிருக்கிறது.

மண்ணெண்ணெய் சில்லறை விலையில் 1 காசு (50 காசிலிருந்து 51 காசாக) உயர்த்தப்பட்டிருக்கிறது.

தொகுதி நலனுக்கு எம்.ஜி.ஆர். வழங்கிய மற்றொரு நன்கொடை

குடிநீர்த் திட்டத்துக்கு ரூ. 8,000 !

சென்னை, மே 9—

பறங்கிமலை சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த சாலிகிராம மக்களின் குடிதண்ணீர்த் திட்டத்திற்கு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் ரூ. 8,000 நன்கொடை வழங்கி இருக்கிறார்.

சாலிகிராமத்தில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி கட்டப்பட்டுவருகிறது. இத்திட்டத்திற்கு தமிழக அரசு ரூ. 20,000-மும், சாலிகிராமம் பேரூராட்சி மன்றம் ரூ. 18,000-மும் வழங்கியுள்ளது. ரூ. 46,000 மதிப்பில் கட்டப்படும் இந்தத் திட்டத்திற்கு மேலும் தேவைப்படும் ரூ 8,000-த்தை தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரான எம்.ஜி.ஆர். வழங்கியிருக்கிறார்.

"சாலிகிராமத்தில் கட்டப்படும் மேல்நிலைத் தண்ணீர்த் தொட்டி தமிழகத்திலேயே கிராம நல வேலைத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் மிகப் பெரும் தண்ணீர்த் திட்டமாகும்"

என்று, பறங்கிமலை ஆணையாளர் நாகசுந்தரம் கூறினார்.

பறங்கிமலைத் தொகுதி ஒட்டியம் பாக்கத்தில் பாலம் கட்ட ஏற்கனவே எம்.ஜி.ஆர். ரூ. 15,000 நன்கொடை அளித்துள்ளது நினைவிருக்கலாம்.

அந்தப் பாலம் கட்டப்பட்டுவருகிறது. இம்மாத இறுதியில் அந்தப் பாலமும், சாலிகிராமம் தண்ணீர் திட்டமும் முதலமைச்சர் அண்ணா அவர்களால் திறந்துவைக்கப்படும் என்று தெரிகிறது.

பாலர் அரங்கம்

மே 10-ந்தேதி மாலை 4-மணிக்கு

'டார்ஜானும் நியூயார்க் வீரச்செயல்களும்'

(எம்.ஜி.எம். படம்)

கட்டணம் வழக்கம்போல்

11, 12-ந் தேதிகளில் திரைப்படக் காட்சிகள் இல்லை.

தஞ்சை மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம்

"தஞ்சை மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம் 11—5—68 காலை 10 மணிக்கு மன்னார்குடி பி. டபிள்யு. டி. பயணிகள் 'விடுதியில்' நடைபெறும்; பிரதிநிதிகள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுகிறேன்; பொருள்: 'கழகத் தேர்தல்'"

என்று மாவட்டச் செயலாளர் மன்னை ப. நாராயணசாமி அறிவிக்கிறார்.

திருக்குறள் நிலைய ஆண்டுவிழா

குருகுலம் திருக்குறள் ஆண்டுவிழா, 10-5-68 மாலை 6-மணிக்கு சென்னை-மவுண்ட்ரோடு பாலர் அரங்கில் நடைபெறும்; நீதிபதி ஆர். சதாசிவம் தலைமை வகிப்பார்; திரு. ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.பி. தொடங்கி வைப்பார்; பேராசிரியர்கள் சி. பாலசுப்பிரமணியம், க. த. திருநாவுக்கரசு, சி. வேங்கடசாமி, சு. இராசலட்சுமி முதலியோர் பாயிரம்பற்றி கருத்துரைகள் வழங்குவர்.

தேவராசன் --- நிர்மலா குழுவினர் கலை நிகழ்ச்சிகள்

மே 10: பழையபேட்டை; 11: ஏர்வாடி; 12: டவுன் மீனாட்சிபுரம்; 13: நல்லான்விளை; 14: நாங்குநேரி; 15: அகிலாண்டபுரம்; 16: இளையரசனேந்தல்; 17: கள்ளிகுளம்; 18, 19: கள்ளிகுளம் பகுதி; 20: சிவகிரி; 21: வாசுதேவநல்லூர்; 26: சுரண்டை; 28: கரூர்; 29: சடையன்கிணறு.

ஞாயிறு இரவு அண்ணா வருகை

சென்னையில் மாபெரும் வரவேற்புக்கு ஏற்பாடு

சென்னை, மே 9—

தற்போது ஜப்பானில் சுற்றுப் பயணம் செய்துவரும் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அங்கிருந்து சிங்கப்பூர் வந்துவிட்டு மே 12-ம் நாள் இரவு 10 மணிக்கு விமானம் மூலம் சென்னை வந்தடைகிறார்கள். விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்படும்.

மறுநாள் காஞ்சியில் அண்ணாவுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்படுகிறது. காஞ்சி சென்றுவிட்டு அண்ணா அவர்கள் மே 14-ம் நாள் சென்னை வருகிறார்கள். அன்று மாலை சென்னையில் மாபெரும் வரவேற்பு ஊர்வலமும் கடற்கரையில் பொதுக் கூட்டமும் நடைபெறவிருக்கின்றன.

மாலை 3-மணிக்கு 'அன்பக'த்திலிருந்து புறப்படும் ஊர்வலம் கடற்கரையை அடையும்; அங்கு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும்.

இத்தகவலை, அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தெரிவித்தார்.

நகராட்சித் தேர்தல்கள்

அமைச்சர்தரும் தகவல்

திருச்சி, மே 9—

"தமிழகத்திலுள்ள 84 நகராட்சிகளுக்கும் செப்டம்பர் திங்கள் இறுதி வாரத்திலும், அக்டோபர் திங்கள் முதல் வாரத்திலுமாக மூன்றுகட்டங்களில் தேர்தல் நடைபெறும்"

என்று உள்ளாட்சித்துறை அமைச்சர் மா. முத்துசாமி தெரிவித்தார்.

"சாதாரணமாக, ஒரு கட்டத்திற்கும் மற்றொரு கட்டத்திற்கும் இடையே இரண்டு நாள் இடைவெளி இருக்கும்" என்றும் அவர் தெளிவுபடுத்தினார்.

'போராடுங்கள் அல்லது செத்து மடியுங்கள்'

கேரள மக்களுக்கு நம்பூதிரிபாடு அழைப்பு

ஆலப்புழை, மே 8—

"வயிற்றுக்குப் போதுமான உணவைப் பெறுவதற்காக 'மத்திய அரசுடன் எழுந்து நின்று போராடுங்கள்; இல்லையேல் பட்டினிகிடந்து நாயைப் போலச் செத்துமடியுங்கள்"

என்று, கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரிபாடு, கேரள மக்களைக் கேட்டுக்கொண்டார்.

இடதுசாரிக் கம்யூனிஸ்டுக் கட்சி நடத்த இருக்கும் போராட்டத்துக்கு ஆதரவு திரட்டும் வகையில் இங்கு நடந்த பொதுக்கூட்டத்தில் திரு. நம்பூதிரிபாடு பேசுகையிலேயே இவ்வாறு கூறினார்.

"நடத்தவிருக்கும் போராட்டம், மத்தியில் உள்ள காங்கிரசு ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அல்ல"

என்றும் முதலமைச்சர் நம்பூதிரிபாடு விளக்கம் அளித்தார்.

கேரள மக்களுக்கு நியாயமான விலையில் போதுமான அளவு அரிசி கிடைக்க மத்திய அரசை வற்புறுத்தும் கடைசி முயற்சியாகவே இந்த உணவுப் போராட்டத்தைத் தமது கட்சி மேற்கொண்டுள்ளதாக அவர் கூறினார்.

(1-ம் பத்தி பார்க்க)

மின்சார ஊழியர் ஓய்வு பெறும் வயது

தமிழக அரசின் புதிய ஆணை

சென்னை, மே 9—

தமிழக மின்சார வாரியத்தில் பணியாற்றுபவர்களின் ஓய்வு வயதில் மாறுதல் செய்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

மின்சார எஞ்சினியர்கள், சில துறைகளிலுள்ள தொழில்நுட்ப அலுவலர்கள், தொழில்நுட்பப் பிரிவைச் சாராத அலுவர்கள் ஆகியோரின் வயதை, புதிய உத்தரவு 55-என நிர்ணயிக்கிறது.

தொழில்துறை ஊழியர்கள் (நிரந்தர விதிகள்) சட்டத்தின்கீழ் 58 வயது வரையில் பணியாற்றும் தகுதி பெற்றவர்களை இந்தப் புதிய உத்தரவு பாதிக்காது.

பஞ்சாலைத் தொழிலில் நெருக்கடி

உடனடியாக நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை

மத்திய அமைச்சர் தினேஷ்சிங்கிடம் முறையீட்டு மனு

புதுடில்லி, மே 8—

"தமிழ் நாட்டில் பஞ்சாலைத் தொழிலில் நெருக்கடியான நிலைமை உருவாகியிருக்கிறது; இதுபற்றி உடனடியாக ஏதாவது நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்"

எனக் கோரும் மனு ஒன்றை, வர்த்தகத்துறை அமைச்சர் தினேஷ் சிங் அவர்களிடம், நாடாளுமன்றத் தமிழக உறுப்பினர்களான செ. கந்தப்பன், கே. ரமணி, உமாநாத் ஆகியோர் அளித்தனர்.

பல துணி ஆலைகள், தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கூட கொடுக்கவில்லை என்பதையும், பணம் முழுவதும் தேங்கிக் கிடக்கும் நூலில் முடங்கிப்போய் இருப்பதால் சம்பளமே தர முடியாத நிலையில் இருப்பதாகச் சில ஆலைகள் கூறுவதாகவும் அவர்கள் அமைச்சரிடம் எடுத்துச் சொன்னார்கள்.

மேலும் அவர்கள் விளக்கியிருப்பதாவது:—

"வாரத்துக்கு இரண்டு நாட்கள் துணி ஆலைகளை மூடிவைப்பது தொடர்ந்து அமுலில் இருந்து வருகிறது ஐந்து நாட்கள் வேலை செய்யும் ஆலைகளில்கூடச் சில இயந்திரங்கள் மட்டுமே வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

"ஆலைகளை மூடி வைப்பதைச் சட்டபூர்வமாகத் தடுப்பதற்குச் சட்டம் கொண்டுவரவேண்டும்.

"தொழிலாளர்களுக்கு ஆலை நிர்வாகம் சம்பளம் கொடுக்கும்படி செய்யவேண்டும்.

"தேங்கிக் கிடக்கும் நூல்களை அரசு வணிகக் கார்ப்பரேஷன் வாங்கிக்கொண்டு, அவற்றை அதே விலைக்குக் கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகிக்க வேண்டும்.

"மூடிக் கிடக்கும் ஆலைகளைத் திறந்து நடத்துவதற்கு மாநில அரசுக்கு நிதி உதவியும், அவசியமான பிற உதவிகளும் அளிக்க வேண்டும்."

தலைமையமைச்சர் அலுவலகச் செலவு

ரூ. 16.91 இலட்சமாம்

203 பேர் பணிபுரிகின்றனராம்

புதுடில்லி, மே 8—

"தலைமையமைச்சரின் அலுவலகத்தக்கு 1967-68-ல் ஆன மொத்தச் செலவு ரூ. 16.91 இலட்சமாகும்"

என்று, தலைமையமைச்சர் இந்திரா, மக்களவையில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"தலைமையமைச்சரின் அலுவலகத்தில் 203 பேர் பணியாற்றுகின்றனர்" என்றும் அவர் சொன்னார்.

தலைமையமைச்சரின் பாதுகாப்புக்காக உள்ள ஊழியர்கள் டில்லி நிர்வாகத்தினரால் அனுப்பப்படுகின்றனர்; அவர்கள், தலைமையமைச்சரின் அலுவலகத்தைச் சேர்ந்தவர்களல்லர். பாதுகாப்புக்கு எவ்வளவு பேர் அனுப்பப்பட வேண்டும் என்பது, அவ்வப்போது சம்பந்தப்பட்ட டில்லி அதிகாரிகளால் முடிவு செய்யப்படுகிறது."

(3-ம் பத்தி தொடர்ச்சி)

"உணவுப் பிரச்சினையை முன்வைத்து நடத்தப்படும் இப்போராட்டத்தில் எதிர்க் கட்சியினர்—குறிப்பாகக் காங்கிரசார் உட்பட எல்லா மக்களும் கலந்துகொள்ள வேண்டும்" என்று அவர் அழைப்பு விடுத்தார்; 'எந்த முறையில் போராட்டத்தை நடத்த என்பதை மக்களே முடிவு செய்துகொள்ளவேண்டும்' என்றார் அவர்.

ஒடவாரா பகுதியில் அண்ணா

அதிகாரபூர்வமான நிகழ்ச்சிகள் ரத்து

வேளாண்மைப் பண்ணைகளைப் பார்வையிடவே விரும்பினார்

டோக்கியோ, மே 8—

அண்ணா அவர்கள் இங்கிருந்து 100 கிலோ மீட்டர் தொலைவில் ஹாக்கோசில் மலையடிவாரத்தில் உள்ள ஒடவாரா சென்று, அங்குள்ள நண்பர் ஒருவரின் இல்லத்திற்குப் போனார்.

அண்ணா அவர்கள் சென்றபோது நல்ல மழை பெய்துகொண்டிருந்தது. ஒடவாரா பயணம் வெளிநாட்டுத் துறை அலுவலகம் ஏற்கனவே தயாரித்திருந்த நிகழ்ச்சி நிரலில் இல்லை; எனினும் அண்ணா அவர்கள் இந்தப் பயணத்தைப் பெரிதும் விரும்பினார்.

யோக காமா பகுதியில் உள்ள ஒரு கப்பற்கட்டும் தளத்தையும், மோட்டார் தொழிற்சாலையையும் இன்று பார்வையிடுவதற்காக அதிகாரபூர்வமான நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டிருந்தது. கப்பற்கட்டும் தளத்தைவிட, வேளாண்மைப் பண்ணையைப் பார்வையிடவே அண்ணா பெரிதும் விரும்பினார். எனவே, கப்பல்,தளத்தைப் பார்வையிடும் நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டு, ஒரு பண்ணையைப் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டது.

கடைசியாக நேற்றிரவு, இன்றைக்கான எல்லா நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்பட்டு விட்டன; இவ்வளவு தூரம் வந்து அதிகாரபூர்வமான நிகழ்ச்சியின்படி, வெறும் தொழிற்சாலைகளையே பார்வையிட்டுக்கொண்டிருப்பதை அண்ணா விரும்பவில்லை.

நேற்று என். எச். கே. ஒலிபரப்பு நிலையத்திற்குச் செல்லும் நிகழ்ச்சியையும் அண்ணா ரத்து செய்துவிட்டார்.

நேற்றிரவு வெளிநாட்டுத்துறை ஆசிய—ஆப்பிரிக்கப் பிரிவு அலுவலக இயக்குநர் திரு. ஹிஷிரோவின் இல்லத்தில் அண்ணா விருந்துண்டார்.

வருந்துகிறோம்

சென்னை, மே 9—

சென்னை 68-வதுவட்ட மாநகராட்சி மன்ற உறுப்பினர் அ. கரிகாலன் அவர்களின் தந்தையார் இன்று காலை இயற்கையெய்தினார். சவ அடக்கம் இன்று இரவு 7 மணி அளவில் நடைபெறும் என்பதை திருவல்லிக்கேணி பகுதி தி. மு. கழகச் செயலாளர் மு. வரதராசன் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24 சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.